**கவனிக்க.**- *2006.11.17 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1473 - 2006 නොවැම්බර් 24 වැනි සිකුරාදා - 2006.11.24

*1473 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 870 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 870 |
| விலைக்கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 871 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, திசெம்பர் 01 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, நவெம்பர் 17 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2006 இன் இல. 332*

*இல. : டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2310.*

**இலங்கை தரைப்படை-நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

*பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, சனவரி 03 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து வைத்தியக் காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

உ/62211 லெப்டினன்ட் கந்தசாமி சிவஞானம் இஇபப

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
*2006, மாச்சு 29.*

*11-594*

*இல. : ஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2333.*

**இலங்கை தரைப்படை-நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்*

*இலங்கை தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006 யூன் மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-*

உ/64963 2/லெப்டினன்ட் சிங்கன்குட்டி ஆரச்சிகே அமல் இந்திக்க பெரேரா, இசிரெ

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ. பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு
*2006.05.19.*

*11-622*

# அரசாங்க அறிவித்தல்கள்

**1984 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் 42 (1) ஆம் பிரிவின் பிரகாரமான சான்றிதழ்**

*பதிவுசெய்யப்பட்ட விலாசம் :*

வரையறுக்கப்பட்ட எயிட்கன் ஸ்பென்ஸ் ஷிப்பிங் நிறுவனம்,
இல. 315, வொக்ஸோல் வீதி,
கொழும்பு 02.

இலங்கைத் துறைமுக அதிகாரசபை, 1984 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தின்கீழ் அந்த அதிகார சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீதும் அதற்கிணங்கவும் செயற்பட்டு, இலங்கையில் வழக்கிலுள்ள சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட கம்பனியொன்றான கொழும்பு 02, வொக்ஸோல் வீதி, இல. 315 இல் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட எயிட்கன் ஸ்பென்ஸ் ஷிப்பிங் நிறுவனம் "ஷ-ஹி-கு" கப்பல் முகவராக இங்கு இதன் பின்னர் விபரமாக விபரிக்கப்பட்டுள்ளவாறாக இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு அறவிடப்பட வேண்டியுள்ள கட்டணங்கள், இந்த அதிகார சபைக்கு செலுத்துவதற்கு தவறியும் மறுத்தும் மற்றும் கைவிடப்பட்டுள்ளதாகவும், அவ்வரையறுக்கப்பட்ட எயிட்கன் ஸ்பென்ஸ் ஷிப்பிங் நிறுவனத்திடமிருந்து இலங்கைத் துறைமுக அதிகார சபைக்கு இருபத்தாறு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து அறுநூற்றிநாற்பத்தாறு ரூபா (ரூ. 26,67,646) மொத்தத் தொகையொன்று தற்போது செலுத்தப்பட வேண்டியுள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றது.

இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் வரையறுக்கப்பட்ட எயிட்கன் ஸ்பென்ஸ் ஷிப்பிங் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய தொகை இந்த சான்றிதழுடன் "அ" என இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட எயெிட்கன் ஸ்பென்ஸ் ஷிப்பிங் நிறுவனத்திடமிருந்து இருபத்தாறு இலட்சத்து அறுபத்தோழாயிரத்து அறுநூற்றிநாற்பத்தாறு ரூபா (ரூ. 26,67,646) தொகையொன்று அறவிடப்பட வேண்டியுள்ளதனை இலங்கைத் துறைமுக அதிகார சபை உறுதி செய்கின்றது.

இலங்கைத் துறைமுக அதிகார சபையின் பொது இலச்சினை 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதியன்று இலங்கைத் துறைமுக அதிகார சபையின் தலைவர் ஸாலிய விக்ரமசூரிய மற்றும் இலங்கைத் துறைமுக அதிகார சபையின் முகாமைப் பணிப்பாளர் டபிள்யூ. ஜீ. சமரதுங்க முன்னிலையில் இங்கு பொறிக்கப்பட்டதோடு அவ்வாறே இலச்சினை பொறிக்கப்படுவது அவர்களினால் இத்தால் கையொப்பமிட்டு உறுதிசெய்யப்படுகின்றது.

ஸாலிய விக்ரமசூரிய,
தலைவர்.

டபிள்யூ. ஜீ. சமரதுங்க,
முகாமைப் பணிப்பாளர்.

**"அ" அட்டவணை**

2001.02.27 ஆந் திகதி "எம். வி. ஷ-ஹி-கு" கப்பலுக்கான வரையறுக்கப்பட்ட எயிட்கன் ஸ்பென்ஸ் ஷிப்பிங் நிறுவனத்தினால் செலுத்தப்பட வேண்டிய தொகை தொடர்பான கூற்று :

2001.02.27 ஆந் திகதி "ஷ-ஹி-கு" கப்பல் தொடர்பில் (கப்பல் குறிப்பு-01-6145) 09 தொகை ஆர். டீ. ஜீ. தொடர்பில் குறைவாக செலுத்தப்பட்ட தொன் ரீதியான துறைமுகத்திற்குச் செலுத்தப்படவேண்டிய தொகை இருபத்தாறு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து அறுநூற்றிநாற்பத்தாறு ரூபா (ரூ. 26,67,646) (அமெரிக்க டொலர் 30,790) தொகை பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது :-

(1) முகவரின் பெயர் - வரையறுக்கப்பட்ட எயிட்கன் ஸ்பென்ஸ் ஷிப்பிங் நிறுவனம்
(2) முகவரின் முகவரி - 315, வொக்ஸோல் வீதி, கொழும்பு 02
(3) செலுத்தப்பட வேண்டிய தொகை :

| | | அமெரிக்க டொலர் |
|---|---|---|
| அறவிடப்பட வேண்டிய தொகை (92,889 x 0.40) | | 37,156 |
| கழி : முற்பணமாக செலுத்தியது | - | (6,366) |
| செலுத்தவேண்டிய மீதி | - | 30,790 |
| நாணய மாற்று வீதம் | - | 86.64% |
| செலுத்தப்பட வேண்டிய தொகை | - | ரூபா 26,67,646 |

மேற்குறிப்பிடப்பட்ட செலுத்தப்படவேண்டிய தொகை பின்வருமாறு உள்ளடக்கப்பட்டுள்ளது :-

| பற்றுச்சீட்டு இல. | திகதி | தொகை (ரூபா) |
|---|---|---|
| 03 டீஜ 875 | 25.04.2003 | 26,62,309 |
| 03 டீஎஸ் 420 | 26.04.2003 | 5,337 |
| | | 26,67,646 |

தயாரித்தவர் : (கையொப்பமிடப்பட்டுள்ளது)
பரிசீலித்தவர் : (கையொப்பமிடப்பட்டுள்ளது)

உறுதிப்படுத்தியவர் :
எல். ஐ. குமாரிகொடகொட,
நிதி முகாமையாளர்,
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை.

அனுமதித்தவர் :
சிராணி வன்னிஆரச்சி,
பிரதம நிதி முகாமையாளர்,
இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை.

11-589

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டம்

"வின்ஸ் ஒடோ (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1992.06.02 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "வின்ஸ் ஒடோ (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங் களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் 373(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணா ரத்ன ஹெற்றியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "வின்ஸ் ஒடோ (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடா தென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள்

பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

என் (பீவீஎஸ்) 9273,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2006, ஒற்றோபர் 20.

11-485

---

### 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டம்

"ரிங்கொமலி டிஸ்ரிக் டிவலொப்மன்ட் எசொசியேசன்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1996.01.09 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ரிங்கொமலி டிஸ்ரிக் டிவலொப்மன்ட் எசொசியேசன்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் 373(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணா ரத்ன ஹெற்றியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "ரிங்கொமலி டிஸ்ரிக் டிவலொப்மன்ட் எசொசியேசன்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாத விடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

என் (ஏ) 513,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை
கொழும்பு 10,
2006, ஒற்றோபர் 20.

11-486

---

### 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டம்

"ரத்ன என்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ரக்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2001.04.30 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ரத்ன என்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ரக்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் 373(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெற்றியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "ரத்ன என்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ரக்டிங் (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப் படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

என் (பீவீஎஸ்)28363,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2006, ஒற்றோபர் 20.

11-487

---

### 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டம்

"ஜயமல் டுவர்ஸ் லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

1938 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1962.08.13 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ஜயமல் டுவர்ஸ் லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் 373(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெற்றிஆராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "ஜயமல் டுவர்ஸ் லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்தி லுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்கு கின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

பீவீஎஸ் 2018
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2006, ஒற்றோபர் 20.

11-488

### 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டம்

*"யூ. எஸ். பி. லங்கா (பிறைவேற்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்*

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2001.06.14 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "யூ. எஸ். பி. லங்கா (பிறைவேற்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் 373(3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெற்றியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "யூ. எஸ். பி. லங்கா (பிறைவேற்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

என் (பீவீஎஸ்) 28607,
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2006, ஒற்றோபர் 20.

11-489

---

### வரையறுக்கப்பட்ட செலான் வங்கி

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 0340-01500552-101 (பொரலஸ்கமுவ கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2006.10.04 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"நுகேகொடையைச் சேர்ந்த குருகுலசூரியகே சிந்தக பெரேரா மற்றும் கல்பொக்கே அரளுவின்னேகெதர குணபால ஆகியோர் "கடனெடுத்தவர்கள்" என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். என். கே. மாம்பிட்டியே என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004.06.08 ஆந் திகதிய 1264 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2006, யூலை 13 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது இரண்டு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து தொளாயிரத்தறுபத்தொன்பது ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ. 2,95,969.69) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட இரண்டு இலட்சத்து தொண்ணூற்றையாயிரத்து தொளாயிரத்தறுபத்தொன்பது ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூ. 2,95,969.69) பணத்தொகையையும் 2006, யூலை 14 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பத்துமூன்று சதவீதப்படி (33%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1264 ஆம் இலக்க முறியினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டும் என வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது".

#### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், ரைகம் கோறளேயின் கும்புக்கே பத்துவில் ஒலபொடுவ மற்றும் பட்டுவிட்ட கிராமங்களில் அமைந்துள்ள தெப்பெத்தேஹேன தெப்பெத்தேவல ஹெனகெதர ஹேன இத்தேகலஹேன மற்றும் இத்தேகலஹேன என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும், உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டி. பியசிறியால் தயாரிக்கப்பட்ட 1995, யூலை 12 ஆந் திகதிய 2970 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு இல. 6 எனக் குறிப்பிடப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள்- வடக்கு : காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவால் உரிமைகோரப்படும் காணி ; கிழக்கு : துண்டு இல. 7 ; தெற்கு : துண்டு இல. 13 (வீதி) ; மேற்கு : துண்டு இல. 2. இது இவ்வெல்லைகளினுள் பதினைந்து தசம் சைபர் இரண்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 15.02பே.) விஸ்தீரணமுள்ளது.

அத்துடன் பின்வருவதன் மேலாகவும் ஊடாகவும் வழி உரிமை கொண்டதாக-

மேலே சொல்லப்பட்ட களுத்துறையில் அமைந்துள்ள தெப்பெத்தேஹேன தெப்பெத்தேவல ஹெனஹெதரஹேன இத்தேகலஹேன மற்றும் இத்தேகலஹேன என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும், வரைபடம் இல. 2970 இல் துண்டு இல. 13 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள்- வடக்கு : துண்டுகள் 2-10 ; கிழக்கு : துண்டுகள் 19 மற்றும் 20 ; தெற்கு : துண்டுகள் இல. 11, 12, 14, 15, 16, 17, 18, 19 மற்றும் இல. A2 ; மேற்கு : துண்டு 1. இது இவ்வெல்லைகளினுள் ஒரு றூட் ஒன்பது தசம் சைபர் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 9.03பே.) விஸ்தீரணமுள்ளது.

மேலே சொல்லப்பட்ட களுத்துறையில் அமைந்துள்ள தெப்பெத்தேஹேன தெப்பெத்தேவல ஹெனகெதரஹேன இத்தேகலஹேன மற்றும் இத்தேகலஹேன என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும், வரைபடம் இல. 2970 இல் துண்டு இல. A1 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள்- வடக்கு : காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி ; கிழக்கு : ஒலபொடுவையிலிருந்து கும்புக்க செல்லும் கிராமசபை வீதி ; தெற்கு : துண்டு A2 ; மேற்கு : துண்டுகள் 11, 13 மற்றும் 10. இது

இவ்வெல்லைகளினுள் இரண்டு தசம் பூச்சியம் மூன்று பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 2.3பே.) விஸ்தீரணமுள்ளது.

மேற்படி சபைத் தீர்மானத்தை வெளியிடும் வேளையில் அதில் கையொப்பமிடுவதற்கு வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர்-சட்டம், திரு. சந்திரசிரி கொட்டிகல அவர்களுக்கு அதிகாரமளிப்பதெனவும் மேலும் தீர்மானிக்கின்றது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்).

11-553/1

---

**வரையறுக்கப்பட்ட செலான் வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. : 5752130 (வெலிமடை கிளை)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் பணிப்பாளர் சபையினால் 2006.08.18 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"வெலிமடையைச் சேர்ந்த கூத்தையா வேலாயுதம் மற்றும் சின்னப்பன் சுந்தராஜ் ஆகியோர் "கடனெடுத்தவர்கள்" என்ற வகையில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியின் சார்பில் பிரசித்த நொத்தாரிசு எம். சீ. ஜே. பீரிஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1994, செத்தெம்பர் 6 ஆந் திகதிய 8283 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும், சொல்லப்பட்ட கூத்தையா வேலாயுதம் 1996, மாச்சு 27 ஆந் திகதியன்று மரணமடைந்ததன்பேரில் காலஞ்சென்ற கூத்தையா வேலாயுதத்தின் சட்டப்படியான உரித்தாளிகளாக விட்டுச்சென்ற இந்துமதி வேலாயுதம், வேலாயுதம் தியாகரூபன், வேலாயுதம் நந்தனி மற்றும் வேலாயுதம் கமலரூபன் ஆகியோர் பண்டாரவளை மாவட்ட நீதிமன்றத்தில் B/Pro/10 ஆம் இலக்க மரணசாசன வழக்கின்படி அவரின் மரணசாதனமில்லா ஆதனத்துக்கு மரணசாதன அதிகாரத்தைப் பெற்றுள்ளார்களாதலாலும்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 (2) ஆம் பிரிவின்கீழ் இப்பொழுது 1999 பெப்புருவரி 28 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது ஐம்பத்தொரு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து ஐநூற்றொரு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூ. 51,69,501.42) வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ஐம்பத்தொரு இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து ஐநூற்றொரு ரூபா நாற்பத்திரண்டு சதம் (ரூ. 51,69,501.42) பணத்தொகையையும் 1999, மாச்சு 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு முப்பது சதவீதப்படி (30%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 8283 ஆம் இலக்க முறியினால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டும் என வரையறுக்கப்பட்ட செலான் வங்கிப் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது".

**அட்டவணை**

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டத்தில், வெலிமடை பிரிவின் உடபலாத்த கோறளேயில் நுகத்தலாவ கிராமத்தில் அமைந்துள்ள "வேமுல்லவத்த மற்றும் உடுமுல்லவத்த அல்லது உடுமுல்லஹேன" என்றழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணிப்பங்கீடு முழுவதும். உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. பி. டபிள்யு. வெல்கொல்ல என்பவரால் தயாரிக்கப்பட்ட 1956.05.06 ஆந் திகதிய 1052A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட சொல்லப்பட்ட காணியின் எல்லைகள்- சொல்லப்பட்ட வரைபடத்துக் கிணங்க- வடக்கு : வெலிமட குரூப் எஸ்டேட் ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் துண்டு இல. 1A மற்றும் துண்டு இல. 2 ; தெற்கு : அகல மற்றும் வெல்ல ; மேற்கு : வெவ. ஒரு ஏக்கர் மூன்று றூட் இருபது பேர்ச்சஸ் (1ஏ. 3றூ. 20பே.) விஸ்தீரணமுள்ள இது பதுளை காணிப்பதிவகத்தில் C 311/116 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே சொல்லப்பட்ட நுகத்தலாவவில் அமைந்துள்ள வேமுல்லவத்த மற்றும் உடுமுல்லவத்த என்றழைக்கப்படுவதும் அறியப்படுவதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ரத்நாயக்கவால் தயாரிக்கப்பட்ட 1994.01.03 ஆந் திகதிய 556 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டதுமான பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப்பங்கு சொல்லப்பட்ட வரைபடத்தின் துண்டு 2 இல் காட்டப்பட்ட வீதி அணுகலைப் பயன்படுத்தும் உரிமை கொண்டதாக. இதன் எல்லைகள்- வடக்கு : வெலிமட குரூப் ; கிழக்கு : துண்டு 2 ; தெற்கு : லஹுஉவெவ மற்றும் அதே காணியின் பகுதி ; மேற்கு : வெலிமட குரூப். ஒரு ஏக்கர் இரண்டு றூட் முப்பத்தொன்று தசம் இரண்டு பேர்ச்சஸ் (1ஏ. 2றூ. 31.2பே.) விஸ்தீரணமுள்ள இக்காணிப்பங்கு பதுளை மாவட்டக் காணிப்பதிவகத்தில் C 515/24 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்).

11-553/2

## ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்-நிட்டம்புவ கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*றன்கிரி பதிரானஹேலாகே அன்ரன் காமினி பிரேமச்சந்திர செனிவிரத்ன, றன்கிரி பதிரானஹேலாகே நிலந்தா செனிவிரத்ன மற்றும் இமியா பதிரானஹேலாகே பத்மசிரி சந்திராணி பதிரான*

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையால் 2006, மே 25 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"றன்கிரி பதிரானஹேலாகே அன்ரன் காமினி பிரேமச்சந்திர செனிவிரத்ன, றன்கிரி பதிரானஹேலாகே நிலந்தா செனிவிரத்ன மற்றும் இமியா பதிரானஹேலாகே பத்மசிரி சந்திராணி பதிரான என்போர் கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பி. என். ஏக்கநாயக்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஒற்றோபர் 8 ஆந் தேதிய 4557 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும் அத்துடன் 2005.12.31 ஆந் தேதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிமீது நாலு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எண்ணூற்று எண்பத்து மூன்று ரூபா (ரூ. 4,78,883) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாதலாலும், ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 4557 ஆம் இலக்க முறிமூலம் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட ரூ. 4,78,883 கொண்ட பணத்தொகையை, 2006.01.01 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள் வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு இறுப்பனவுகளுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைக்காரர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியன கோறளையின் மெதப்பற்றுவில் மீரிகம பிரதேச சபையின் பல்லேவெல உபஅலுவலக எல்லைகளுக்குள் கல்கமுவ என்னுமிடத்தில் அமைந்தள்ளதும் "கலபோவத்தை" என அழைக்கப்படுவதுமான காணியிலிருந்து உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. கன்னங்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998.11.19 ஆந் திகதிய 1022/1998 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் மற்றும் அதிலுள்ள கட்டிடங்கள் மற்றுமெல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் அச்சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள்- வடக்கு : ஆர். பி. ஏ. ஜி. பி. செனிவிரத்ன என்பவரால்உரிமை கோரப்படும் காணி மற்றும் வீதி (ஆர். பி. ஏ. ஜி. பி. செனிவிரத்ன என்பவரால் உரிமைகோரப்படும் காணி எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது) ; கிழக்கு : எச். டி. பாபிலிஸ் சிஞ்ஞோ, ரி. கே. பாப்சிஞ்ஞோ, ரி. கே. ஜேமிஸ் சிஞ்ஞோ என்போரின் காணிகள் (ஆனால் எச். டி. பாபிலிஸ் சிஞ்ஞோ, ரி. கே. ஜேமிஸ் சிஞ்ஞோ என்போரின் காணிகள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது) ; தெற்கு : ரி. கே. ஜேமிஸ் சிஞ்ஞோ மற்றும் தயாராஜபக்ஷ என்போரால் உரிமைகோரப்படும் காணிகள் ; அத்துடன் மேற்கு : வை. கே. யாப்பா என்பவரின் காணி. கம்பஹா மாவட்ட காணிப்பதிவகத்தில் C 749/149 என்னும் தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்டதும் 1022/1998 ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் ஒரு றூட் முப்பத்து மூன்று தசம் ஏழு நாலு பேர்ச்சுகள் (0ஏ. 1றா. 33.74பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்),
சபைச் செயலாளர்.

11-657/1

---

## ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் - மினுவங்கொட கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

*வீரக்கொடி ஆரச்சிகே செபஸ்தியன் பெரேரா*

ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையால் 2006, யூலை 27 ஆந் தேதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேட மாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"வீரக்கொடி ஆரச்சிகே செபஸ்தியன் பெரேரா என்பவர் கடப்பாடுடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் சார்பில் நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜி. எம். எம். பர்னாந்து என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003.10.23 ஆந் தேதிய 632 ஆம் இலக்க முறிமீதும் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பி. என். ஏக்கநாயக்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஒற்றோபர் 26 ஆந் தேதிய 4571 ஆம் இலக்க முறிமீதும் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் அத்துடன் 2005.11.30 ஆந் தேதியன்று உள்ளவாறாக ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்குச் சொல்லப்பட்ட முறிமீது மூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரத்து நாநூற்றுத் தொண்ணூற்றேழு ரூபா எழுபத்தொரு சதம் (ரூ. 3,46,497.71) கொண்ட பணத்தொகையொன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாதலாலும், ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணைகளில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 632 மற்றும் 4574 ஆம் இலக்க முறிகள்மூலம் ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் தாபனத்துக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும், சொல்லப்பட்ட ரூ. 3,46,497.77 கொண்ட பணத்தொகையை, 2005.12.01 ஆந் தேதியிலிருந்து விற்பனை நாள் வரை அதன் மீதான மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும்

வேறு இறுப்பனவுகளுடனும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காகக் கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனைக்காரர் ஆர். எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குறு கோறளையின் தாசியபற்றுவில் நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள் பிட்டிபான என்னுமிடத்தில் அமைந்துள்ளதும் சுதுவெல வீதி இடதுபக்கம் 7 என்னும் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் நெல்லிகஹாவத்தை மற்றும் ஜம்புகஹாவத்தை என அழைக்கப் படுவதுமான காணியின் பகுதியிலிருந்து சொல்லப்பட்ட 3890/1982 ஆம் இலக்க வரைபடத்தில் 2003.01.17 ஆந் தேதியன்று உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எச். எல். குறூஸ் தாபேரர செய்யப்பட்ட புறக்குறிப்பு மூலம் உரிமம்பெற்ற நிலஅளவை யாளர் எச். எல். குறூஸ் தாபேரர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1982.03.12 ஆந் திகதிய 3890/1982 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டுகள் 1, 2 மற்றும் 3 (இணைக்கப் பட்ட) என அடையாளமிடப்பட்டனவுமான அப்பிரிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட காணித்துண்டுகள் முழுவதும் மற்றும் அவற்றிலுள்ள கட்டிடங்கள் மற்றுமெல்லாமும் சேர்த்து. சொல்லப்பட்ட 1, 2, 3 காணித் துண்டுகளின் எல்லைகள்– வடக்கு : மனுவல் பர்னாந்துவின் காணி ; வடமேற்கு : V. C. ரோட் ; தெற்கு : எஸ். பர்னாந்து மற்றும் சிரில் பர்னாந்து என்போரின் காணிகள் ; அத்துடன் மேற்கு : டி. ஜோன் பர்னாந்துவின் காணி. முப்பது தசம் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 30.3பே.) விஸ்தீரணமுள்ள காணி. (சொல்லப்பட்ட 3890/1982 ஆம் இலக்க வரைபடத்தின்படி) நீர்கொழும்பு மாவட்டக் காணிப்பதிவகத்தில் C 641/138 என்னும் தலைப்பின்கீழ் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்),
சபைச் செயலாளர்.

11-657/2

---

## PABC வங்கி

(முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி)

வாடிக்கையாளரின் பெயர் – செய்யது அஹமட் மொஹமட் நஸீர் கிளை – குருநாகல்,

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ், வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கியின் பணிப்பாளர் சபையினால் 25.10.2006 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"செய்யது அஹமட் – மொஹமட் நஸீர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கோப்பரேஷன் முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி, சார்பில் பிரசித்த நொத்தாரிசு எல்சி ஷாந்த – ரெகாவ என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 14.12.2000 ஆந் திகதிய 9340 இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்போது 31.08.2006 ஆந் திகதியன்று சொல்லப்பட்ட முறியின் மீது வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கிக் கோப்பரேஷனுக்கு வட்டியுடன் பதின்மூன்று இலட்சத்து முன்னூற்றிநாற்பத்தொன்பது ரூபா எண்பத்தெட்டு சதம் (ரூ. 13,00,349.88) அத்துடன் 01.09.2006 முதல் ஏழு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து ஐந்நூறு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 7,37,500.65) கொண்ட தொகை மீது (31.5%) வட்டியும், 01.09.2006 முதல் மேற்கூறப்பட்ட முறிவின் கடைசிக் கொடுப்பனவு வரை மூன்று இலட்சத்து அறுபத்தைந்தாயிரம் ரூபாவுக்கு (ரூ. 3,65,000) வருடத்திற்கு இருபத்தெட்டு வீத வட்டியும் (28%) சொல்லப்பட்ட 9340 ஆம் இலக்க முறியினால் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கோப்பரேஷனுக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம் 24, டொறிங்டன் வீதி, கண்டியைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் சொக்மன் சமரவிக்ரம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென வங்கிகளால் கடன்கள் அறவிடப்படும் (விசேட ஏற்பாடுகள்) கட்டளைச் சட்டத்தின் 13ஆம் பிரிவிற்கிணங்க வும் இவை அறவிடப்படும்."

**அட்டவணை**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மேகொட கோரளே மகாகல்பொட, ஹதிரவலான கிராமத்தில் அமைந்துள்ள WCSM அபேசேகரா என்ற அனுமதிபெற்ற நில அளவையாளரினால் 15.03.1986 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 54ஏ/86 குறியீடு செய்யப்பட்ட இல. 22, 23 என்ற காணித்துண்டு– வடக்காக : x வரையறைப்படம் இல. 962 குறியீடு i, j ; கிழக்காக : வரைபடம் இல. 54ஏ/86 குறியீடு 24 ; தெற்காக : 12 அடியும் ; மேற்காக : வரைப்படம் 54ஏ/86 குறியீடு 25(15அடி) முற்றாக முப்பத்தி ஏழு தசம் ஐந்து பேர்ச்சஸ் (0A. 0R. 37.5P) அத்துடன் வரைபடம் இல. 54a/86 படி பாதைவழி.

மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், மகாகல்பொட மேகொட கோரளே வெடவிள்ளி ஹட்பத்து கிராமத்தில் அமைந்துள்ள mw அரியரட்ன என்ற அனுமதிபெற்ற நிலஅளவையாளரினால் 15.03.1997 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 827 குறியீடு இல. 01– வடக்காக : யகில அவியஸ் ரகில உம்மா என்பவரது காணியும் ; கிழக்காக : m.m. நஸாரி, mmm அன்ஸார் ஆகியோரின் காணியும் ; தெற்காக : வரைபடம் இல. 827 குறியீடு z; மேற்காக ஹிஷார மாவத்தையுமாக இருபத்தி எட்டு பேர்ச் (0A.0R. 28P) அத்துடன் அதனுள் இருக்கும் அனைத்தும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

வருணி எகொடகே,
முகாமையாளர் – சட்டம்.

11-675

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.